224

11 JAN 1923


உ

முருகன் துணை.

சென்னிமலை

# ஆண்டவர் புதிய பக்திரசக்

## கீர்த்தனை.



இஃது

கோபிசெட்டிபாளையம் புஸ்தக வியாபாரம்

**M. நாராயணசாமி பிள்ளை**

அவர்களால்

இயற்றப்பட்டு


கோபிசெட்டிபாளையம்

"மணியன்" அச்சுயந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

1923. [அணா 2.

காபிகள்,—1000.

உ

முருகன் துணை.

சென்னிமலை

# ஆண்டவர் புதிய பக்திரசக் கீர்த்தனை.

இஃது

கோபிசெட்டிபாளையம்.

டி. எம். என். பக்கிரிசாமி பிள்ளை

விருப்பத்தின் படியும்

ஆ. காளி செட்டியார்

வேண்டுகோளின்படியும்

கோபிசெட்டிபாளையம் புஸ்தக வியாபாரம்

M. நாராயணசாமி பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு

---

கோபிசெட்டிபாளையம்

"மணியன்" அச்சுயந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1923.

உ

முருகன் துணை.

வெண்பா.

செந்தமிழால் பானுரைக்கும் சென்னிமலை வேலவரின்
அந்நிமிறை மேன்மையுட னுதரிக்க—முந்துமே
காரார் வரைபயின்ற சன்னிப் பிடியளித்த
ஓரானை வந்தின் றுவந்து.

---

சோக்கலிங்க கடவுளே என்றமெட்டு.

பலலவி.

மயில் ஏறிவிளையாடும் குகனே உனக்கு இசைந்த மயில்வாகனக்
கடவுளே வள்ளிமணளா மயில்வாகன கடவுளே. (மயில்)

அனுபல்லவி.

தந்தைக்கு உபதேசித்த மந்திரமான குருமயில் வாகன
கடவுளே வள்ளிமணளா மயில்வாகன கடவுளே. (மயில்)

சரணம்.

மாராதசூரர்களை நேராய் சேய்த்துநின்ற மயில்வாகன
கடவுளே வள்ளிமணளா மயில்வாகன கடவுளே. (மயில்)

தொகெரா.

நாராயிணசாமி மனதிலே நடனமாடும் மயில்வீர
சிங்கமே இரண்டு நாட்டிய பெண்களோடு
கூட்டமாய் விளையாடும் நடராஜன் மயிந்தனே (மயில் ஏறி)

---

திருக்கூத்தாடி மகனே என்றமெட்டு

பல்லவி.

திரு நடனமாடிய மகனே திருமால் மருமகனே (திருநடனம்)

அநுபல்லவி.

அருபத்திநாலுதிரு விளையாட்டில் சிறந்தவா அருமுகவேலவனும் சூரர்வதை செய்தவனும் அருணகிரி நடனமிட மயில்வீரன் குகனுட (திருநடனம்)

சரணம்.

தேவரகசியமாம் தில்லை அம்பலத்தில் மூவ்வரால் உற்பத்தி யான மூலபொருளான வேதம் தேவர்கள் முனிவர்களாட தில்லை அம்பலமாட நாருயிணசாமி பாட நடராஜன் நடனமாட (திருநடனம்)

---

## குரவர் பெண்கள் என்ற வற்ண மெட்டு.

மதுரமாண பெண்கள்கூட மதுவள்ளி கவுண்கல் வீச மலைவேடுவர் மக்கள் உடன் கூடி கூடி மூர்த்திகந்த வேல் கடவுள் தேடி தேடி மதுரகிளிகள் கீதம்பாட சறவண பவ குருவைத்தேட நாடி நாடி.

தொகெரு.

மதுரையிலே திருவிளையாடலில் சிறந்த மாதுபாகம் தந்தவன் மயிந்தனே மலைவேடுவர்களுக்கு மருமகனுக அவதா றம் செய்த மயில்வீர சிங்கமே (மதுரமான)

---

## வருவாயோ வடமாலி என்ற மெட்டு.

பல்லவி.

எப்போத்தான் வருவாயோ உன்
திருவுள்ளமிரங்கி முன்னில் நீ (எப்போ)

அநுபல்லவி.

அப்பனே சென்னிமலை அருமை தெண்டபாணியே
உன் அவதாரம் ஆனரூபம் அடியார்க்குத் தெரிசனம் (எப்)

சரணம்.

சோமவாரம் தோரும் துதிக்கிறேன் உனைத்தேடி
உன் நாமமனதப்பாடி நாருயணன் கொண்டாடி (எப்போ)

## ஜெயராம என்ற மெட்டு.

பல்லவி.

தெண்டபாணி தெய்வக்குஞ்சர மோகன (தெண்)

அனுபல்லவி.

அண்டரண்ட புவனமொடு தொண்டராய்த்திரிகிற
வீரதீரசூரபால மேவதாரகா (தெண்)

சரணம்.

நாருயணசாமி கீதம்பாடிட நாடி நாடி மனம்
தேடித்தேடி உனைக் கோடி கோடி சரணம் வாடிவாடித்திரி
கிற (தெண்)

---

அயோத்திமா நகர் சிறப்பு

## நீலமேக வர்ண மெட்டு

முன்னும் அயோத்திநகர் பொன்னும் அரண்மனையில் கூடவே
தேவர்நாடவே பெண்கள்பாடவே ஸ்ரீமன் நாருயணன்
ஜெனனம் ஆனுர்என்று தேவர்கொண்டாடவே கீதம்பாடவே

அனுபல்லவி.

சாமகளவர்ண நீலமேகமும் அனுரே ராமர்க்கானதே
கையில் சங்குசக்ர கோதண்ட ராமபாணம் பாருங்கள்

சரணம். மூர்த்தியைக்கூருங்கள்.

தம்பி லெக்ஷ்மணன் மங்கை சீதையுடன் கோஷ்டமே
தேவர்நாட்டமே கொண்டாட்டமே.
துத்திமத்தளமும் வீணைசங்கீதங்களும் நாடவே
நாருயணன் பாட்டுப்பாடவே

---

கொஞ்சம் சங்கடமா என்ற மெட்டு—தாளம் ரூபகம்.

பல்லவி.

1. சென்னிமலையாண்டி-அவன் கன்னி வள்ளியுடன் கலந்தவன்னின்
ருண்டி. (அவன் சென்னி)

### அநுபல்லவி.

2. புண்ணாக்குச் சித்தன் மலையிலமர்ந்தாண்டி—புண்ணிய
வானந்த போகர்மலை யாண்டி-கன்னி வள்ளியை
மணமும் புரிந்தாண்டி—கதிர்காமம் தன்னிலே ரகசிய
மானாண்டி. (சென்னி)

### சரணங்கள்.

3. ஆதிப்ரணவமாகவும் வந்தாண்டி அடியார்களுக்கு
தெரிசனம் தந்தாண்டி-நீதியுடன் அகஸ்தியர்க்குப
தேசம் செய்தாண்டி-நித்தன், பக்தன், சுத்தன் ஆசவு
மானாண்டி. (சென்னி)

4. பாலுந் தயிரும் சென்னிமலையாண்டி—பஞ்சாமிர்தத்துக்குப்
பழனிமலையாண்டி—நாலுமுக பிர்மாவுக்குபதேசஞ்
செய்தாண்டி-நாதாக்கள் பேசகிட அவதாரமானாண்டி (சென்)

5. சரவணப் பொய்கையில் தானும் பிறந்தாண்டி—தாயென்ற
மலைனன்மணியையும் கண்டாண்டி-குறத்திக்கு
மணவாளனாக வந்தாண்டி—குமரனென்ற பேரையுங்
கொண்டாண்டி. (சென்னி)

6. ஆறுமுக வேலனாகவும் வந்தாண்டி—அடியார்களுக்கு
அபயத்தைத் தீர்த்தாண்டி—ஆறுக்கு மஞ்சாத அசுரனை
வென்றாண்டி—அவனே இந்திரன் மகளை மணந்தாண்டி (செ)

7. கத்தரிக்காய்ச் சித்தன் மலையிலமர்ந்தாண்டி—கழுகாசல
மென்ற பேரையுங் கொண்டாண்டி—சத்திவேலையுங்
கையில் பிடித்தாண்டி—தானே இந்திரனுக்கு மகு
டங் கொடுத்தாண்டி. (சென்னி)

8 திருச்செந்தூரினில் தேவனாய் வந்தாண்டி—திருமுரு
கன் பூண்டியில் திருடனாய் நின்றாண்டி—திருமுருகாற்றுப்
படையையும் வென்றாண்டி—திருவண்ணாமலையினில்
திருப்புகழுக்குகந்தாண்டி (சென்னி)

9. சூரனை சம்மாரஞ் செய்யவும் வந்தாண்டி—தோகை
மயில் மீதில் ஏறியவன் கொண்டாண்டி—வீராக
வனைத்துதாகச் செய்தாண்டி—வேதாந்த நூல்களுக்கு
ராஜாவாய் வந்தாண்டி. (சென்னி)

10. எட்டுக்குடியாண்டி—எண்கண் குமாராண்டி—திட்ட
மலையாண்டி-தேவர்க்குகந்தாண்டி-வட்டமான
மயிலேறி வருவானரளிமலையாண்டி. (சென்னி)

11. வள்ளிக்காக வேங்கை மரமாகி நின்றாண்டி—வளையல்
செட்டியைப்போல் வேஷமுங் கொண்டாண்டி—
புள்ளிமான் வேட்டைக்குப் பிரியமாய் வந்தாண்டி—
புரளி நாரதருக்கு தரிசனம் தந்தாண்டி. (சென்னி)

12. ஆதாரப் பொருளாகவும் வந்தாண்டி—அடியார்களுக்கு
அபயத்தைக் காப்பாண்டி—நாராயணசாமி
மனதில் நர்த்தனமும் மயில் வீரன் சத்தமுடன் நிற்
பாண்டி. (சென்னி)

---

## மோகனாங்கி மானே என்ற வர்ண மெட்டு.

சென்னிமலை வேலா உனை தேவர் தொழும் பால
உன்மேல் சிந்தைஎல்லாம் கோடி கோடி துதிக்கிறேன்.
நான் பாடி பாடி (சென்னி)

கோடிஜனம் கூட்டம் குமறன்மேல்க் கொண்டாட்டம்
நாடியேதேவர்எல்லாம் நடனம்புரிவார் கோஷ்ட்டம். (சென்)

அஞ்சு மூன்றெழுத்து அது அஷ்ட்டகர்மசித்து
விஞ்செழுத்து மூன்றுவுயிர் எழுத்து ஒன்று. (சென்னி)

நல்ல இந்த காலம் நடக்கும் அலங்காறம்
சொல்லும் இந்த சோமவாரம் தொண்டர்களுக்குக
ந்த காலம். (சென்னி)

வாரம் ஒருமுறையே உனை வருந்துவேனுன் துரையே
கோரய் முன்னில்வந்து உன் தெருசனம் தருவாய்
இன்று. (சென்னி)

மாறு ஆதமுத்து மயில்வாகன சித்து
நாறுபணசாமி மனதில் நடனமாடும் சித்து. (சென்னி)

---

## சோமசேகரதருளும் என்ற மெட்டு.

சூரபத்மாவை வதைத்த சிங்கம் சிங்கம்
வீரதோகை மயில் ஏரிக்கொண்ட தங்கம் தங்கம். (சூ)

ஆருமுக வேல்தரித்த வேலன் வேலன். (சூ)

குறத்தி வள்ளியை மணந்த கோலன் கோலன். (சூ)

தந்தைக்குபதேசித்த சித்தன் சித்தன்
கந்த காரணக்கடவுளான முத்தன் முத்தன். (சூ)

நாறுயணசாமியுடன் பாட்டை கேட்டு
பாறுயணம் செய்மனதை நாட்டு. (சூ)

## கார்த்தியா நித்யகல்யாண என்ற மெட்டு.

பல்லவி.

ஆதிசிவமயிந்தனே ஆருமுகவேலவனே
பாதிமதிபணிந்த பரமனின் திரு அவதாரமே. (ஆதி)

(அனுபல்லவி)

சோதிமயமாகி நின்ற சுந்தரியின் பாலகனே
நீதியான பிர்மாவுக்கு ஓதிவைத்த மந்திரனே. (ஆதி)

(சரணம்)

குறத்திவள்ளி மணவாளனே கோபாலன் மருமகனே
நாருயணசாமி பாட நாட்டியபெண்களாட. (ஆதி)

## பாட்டு.

பன்னீருலபிஷேகம் சென்னிமலையார்க்கு
பஞ்சாமிர்தபிஷேகம் பழனிமலையார்க்கு
கன்னியின் வேலன் கார்த்திகை தீறன்
சென்னிமலையினில் சிங்கார வேலன்.

(தொகையரு)

ஆருதாரப்பொருளாக நிர்க்கின்ற ஆதிமூலமே—இந்த
அரக்கர் குலத்துக்காக அவதாரம் செய்த ஆருமு
கபெருமானே—அனுதினமுன் திருவடி சரவண
பவகுரு யினியொரு முறையுரை அன்புக்கு அன்
பவனே நாருயணசாமிக் குகந்தவனே. (பன்னீ)

## பவனகிரி அதி புகழும் என்ற வர்ண மெட்டு.

(பல்லவி)

சரவண பவ குருவேஷன் முகனே என்முன்னில் வா(சரவண)

(அனுபல்லவி)

உனையல்லா வேறெனக்கு உற்றவர்கள் யாரு
மில்லை கண்திறந்து பார்ப்பதற்கு கடவுளே
மயிலேரிவா (சரவண)

(சரணம்)

நமச்சிவாயனே நாடும் பஞ்சாக்ஷரனே தேடி உந்தனை
நானும் வாடி அலைகுறேனே தினமும் உந்தனைபாடி
நாருயணன் கொண்டாடி. (சரவண)

## இசைந்த சூலம் என்ற மெட்டு.

இம்ராஜனி லாவதெங்கும் (கனலாலே
இளவாடையு முருமோருக்கும் (படியாலே
சமராஷப யாரனெடுக்கும் (கணையாலே
தனிமாணுயிர் சோரு மகற்கோன் (றருள்வாயே
குமராமுரு காசடிலத்தன் (குருநாதா
குறமாமகளாசை தணிக்கும் (திருமார்பா
அமராவதி வாழ்வ மரர்க்கன் (றருள்வோனே
அருணபுரி வீதியினிற்கும் (பெருமாளே

---

### முருகன் துதி.

வேலாறு வாமுகனை வேண்டுதிரேல் வெவ்வினைகள்
நாலாறு காதம் நடக்குமே—மேலாறு
மாமதிய முருசடை வாமியொரு பாகமுறை
நேமனருள் சேயெனவெண்ணி.

மகா-ள-ள-ஸ்ரீ பத்மநாதய்யர் அவர்கள் சாத்துகவி.

வண்ணமுடன் கோவை வயனமிகு மஞ்சரியும்
திண்ணமுடன் பாடல் சிறக்குமோ—மண்ணகத்து
நாராயணசாமி நன்மையுட னேசெய்த
சீரார் கவிக்கிணையோ செப்பு.

---

### வாழி.

முப்பத்தி முக்கோடி தேவர் கணபதி முருகன் வாழி
முக்கண்ணன்—திருமாலும் பிர்மன் வாழி
செப்பரிய பார்வதி லக்ஷ்மி சரஸ்வதியும் வாழி
சிறப்புறு நர்கவி கற்ற பெரியோர் வாழி
இந்நூலை அச்சிட்ட நாராயணசாமி—வாழி
இப்புவியில் பற்பல நூல்களை பதுப்பிக்கும்
செல்வ சீர்பெருகும் மணியன் அண்டு கோ வாழி
உத்தம ஜார்ஜ் மன்னர் வாழி

வாழி. வாழி. வாழி.

---

சென்னிமலை ஆண்டவர் புதிய பத்திரசக் கீர்த்தனை முற்றிற்று.

# விளம்பரம்.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் எங்கள் இடம் அடியில் கண்ட புஸ்தகங்கள் தேவையுள்ளவர்கள் இதில் உள்ள விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

விபரம்.

ராமாயண வசனம்
பாரத வசனம்
பாகவத வசனம்
பகவத் கீதை
நாலடியார்
குறள்
அனுபோக வயித்தியம்
அகஸ்தியர் தேவாரம்
நயிடதம்
நந்நூல்
காண்டி உரை
விர்த்தி உரை
பக்த விஜயம்
இரண்டாம் பாகம்
அடங்கன் முறை
பெரிய புராணம்
திருவிளையாடல் வசனம்
மஸ்தான் பாடல்
கந்த புராணம் வசனம்
பட்டணத்தார் பாடல்
தாயுமானவர் பாடல்
தாயுமானவர் உரை
தனி பாடல்திரட்டு
விநாயகர் புராணம் வசனம்
ராம நாடகம்
அருணாசல புராணம் உரையுடன்
பெரிய திருப்புகழ்
முத்துசாமி கவிராயர் ராமாயணம்
அரிச்சந்திர புராணம்
நீதிநெறி அரிச்சந்திர நாடகம்
சிவசாமி நாடகம்
இரணிய நாடகம்
ராமாயண பாட்டு
பாரத பாட்டு
பாகவத பாட்டு
வில்லிபுத்தூரார் பாரதம்

இன்னும் சோதிட புஸ்தகங்களும், வயித்திய புஸ்தகங்களும், அம்மானை புஸ்தகங்களும், டிராமா வர்ண மெட்டால் அமைக்கப்பட்ட திருப்புகழ் சந்தம் தனியாய் அமைக்கப்பட்ட சரித்திர நினுசுகளும், இன்னும் சில்லரை புஸ்தகங்களும் தேவையுள்ளவர்கள் விலை சரசமாய் எங்களிடம் வி. பி. மூலமாயும் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

அடியில்கண்ட விலாசதார்களிடம் புஸ்தகம் பெற்றுக்கொள்ளலாம்

J. M. நாராயணசாமி பிள்ளை,
புஸ்தக வியாபாரம்,
கோபிசெட்டிபாளையம்.

ஆ. காளி செட்டியார்,
புஸ்தக வியாபாரம்,
காளிங்கராயன்பாளையம்,
குன்னத்தூர் போஸ்ட்டு,
ஊத்துக்குளி மார்க்கம்.